தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : முனைவர் த.இராஜேந்திரன்

ந.க.எண்.42477/அ4/இ3/2024, நாள்.02.08.2024

......

பொருள்: நேரடி நியமனம் - பள்ளிக் கல்வித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - (தொகுதி - IIA பணிகள், நேர்காணல் அல்லாத பதவி) - 25.02.2023 நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தொகுதி - IIA முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றவர் - உதவியாளர் பதவி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவுப் பட்டியல் பெறப்பட்டது - <u>தற்காலிக அடிப்படையில் நிபந்தனைக்குட்பட்ட நியமன ஆணை வழங்குதல்</u> - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக் கல்வித் [ப.க.4(2)] துறை, நாள். 28.10.2013.
2. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள். 15.04.2015.
3. சென்னை-3, தமிழ்நாடுஅரசுப்பணியாளர் தேர்வாணையம், செயலரின் கடிதம் எண். 1079/PSD-A2/2024, நாள். 06.07.2024.

******

<u>ஆணை:</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 25.02.2023 அன்று நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தொகுதி-IIA முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்று நேரடி நியமனம் மூலம் உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்ய (தொகுதி - IIA பணிகள், நேர்காணல் அல்லாத பதவி) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (03)ல் கண்ட கடிதப்படி பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிநாடுநருக்கு அவரது பெயருக்கெதிரில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12-ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண் | பணிநாடுநரின் பதிவு எண், பெயர் மற்றும் முகவரி திரு./திருமதி./செல்வி. | நியமனம் வழங்கப்படும் அலுவலகம்/பள்ளி |
|---|---|---|
| 398 | 0301071388<br>DHEEPA.D,<br>EAST STREET, KEERAPALAYAM,<br>VELLAKARAI POST,<br>CUDDALORE,<br>CUDDALORE - 607003. | வட்டாரக் கல்வி அலுவலகம், ஒலக்கூர், விழுப்புரம் மாவட்டம். |

(த.பி.பா.)

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நபர் பணியில் சேரும்போது சிவில்சர்ஜன் தகுதிக்குக் குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உரிய படிவத்தில் உடற்தகுதி சான்று பெற்று பணியில் சேரும் போது அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. மாற்றுத்திறனாளிகள் சார்பில் அவர்களது ஊனத்தின் தன்மை மற்றும் சதவிகிதம் மற்றும் உடல் ஊனம் அவரது பணிக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்பன போன்றவை மாவட்ட மருத்துவ குழு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.
3. அரசாணை (நிலை) எண். 303, நிதித் (ஊதியக்கட்டு) துறை, நாள். 11.10.2017 ன்படி பணியில் சேர்ந்த நாள் முதல் ரூ.20600-65500 (Level 10)ல் அடிப்படை ஊதியம் மற்றும் இதர படிகள் பெறத் தகுதியுடையவர் ஆவார்.
4. இப்பணியாளர் பங்குத்தொகை ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) மட்டும் சேரத் தகுதி உடையவர் ஆவார்.
5. சம்மந்தப்பட்ட நபர் இப்பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் பணியில் சேரவேண்டும். பணியில் சேருவதற்குக் கால அவகாசம் / பணியிட மாற்றம் கேட்டு அனுப்பப்படும் கோரிக்கை ஏற்கப்படமாட்டாது. நியமனம் செய்யப்பட்ட இடத்தில் உரிய காலத்தில் பணியில் சேராவிடில் நியமனம் பெற்றுள்ள நபரின் பெயரைத் தேர்வாணையத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நியமன அலுவலரால் நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.
6. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 7 (5)இன்படி செல்லுந்தன்மையுடைய காரணத்திற்காகப் பணியில் சேரும் விண்ணப்பங்கள் நியமன அலுவலரிடம் சமர்ப்பித்து, அக்கால அவகாசம் நியமன அலுவலரின் பரிசீலனைக்கு உட்பட்டு ஏற்புடையதாகின், நியமன அலுவலரால் கால அவகாசம் வழங்கப்படும்.
7. பணிநியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலை வாய்ப்புப் பதிவு அட்டையை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அலுவலகத் தலைவர் சம்பந்தப்பட்ட நபரின் வேலைவாய்ப்புப் பதிவு அட்டையைப் பெற்று சார்ந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒப்படைத்து ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(த.பி.பா,)

8. இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினையும், துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல், சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் பாகம்-1, தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை நிருவாக அலுவலர் தாள்-I, தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை நிருவாக அலுவலர் தாள்-IIல் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் தனியருடைய தகுதிகாண் பருவம் அதிகப்படியாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாகக் காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 33 (4 )இன்படி இப்பணிநாடுநர் அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

9. நியமனம் செய்யப்படும் இந்நபர் இடைநிலைக்கல்வி (SSLC) பொதுத்தேர்வில் தமிழை ஒரு பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டாண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

10. நியமனம் செய்யப்படும் இந்நபர் ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிவேன் என்பதற்கும், இல்லையெனில், பயிற்சிக் காலத்திற்கான ஊதியத்தைத் திருப்பிச் செலுத்திவிடுவேன் என்பதற்கும் உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தற்போது வேறு துறையில் பணி புரிபவராயின் உரிய பணிவிடுவிப்பு சான்று பெற்று பணியில் சேர வேண்டும்.

11. நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்விச் சான்றுகள், சாதிச்சான்று, மற்றும் இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால், தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

12. தனியரின் கோரிக்கை விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரரின் கோரிக்கை விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளவை ஏதும் பின்னர் தவறு எனக் கண்டறியப்படின் தனியரின் தேர்வு மற்றும் நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

(த.பி.பா.)

13. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இப்பதவிக்கு நடத்தப்பட்ட தேர்வுக்கான விண்ணப்பத்தில் தங்களால் அளித்துள்ள விவரங்களின் அடிப்படையிலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது. தாங்கள் அளித்த விவரங்கள் ஏதேனும் தவறானது எனக் கண்டறியப்பட்டால் இந்நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

14. இந்நியமனம் இவரது தமிழ்வழிக் கல்வி பயின்றசான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்த்தலுக்கு உட்பட்டதாகும் என்றும் இவர் சார்பாக அளிக்கப்பட்ட தமிழ்வழிக் கல்வி பயின்ற சான்றிதழ் உண்மைத்தன்மை அற்றவையெனத் தெரியவந்தால், இந்நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், பெற்று வழங்கப்பட்ட ஊதியமும் பிடித்தம் செய்யப்படும். மேலும், உண்மைத்தன்மை அறியப்பட்ட பின்னரே இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்படும்.

நியமனம் பெற்றுள்ள நபரின் கல்விச் சான்றுகள், சாதிச்சான்று மற்றும் இதர ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே பணியில் சேர அனுமதிக்க வேண்டும் என்றும், மேற்படி நபர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் சம்மந்தப்பட்ட அலுவலக தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இத்தற்காலிக நியமனமானது மாண்பமை சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி - IIA பணிகள் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இவரது பணியை வரன்முறை செய்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர் :

DHEEPA.D,
EAST STREET, KEERAPALAYAM, VELLAKARAI POST,
CUDDALORE,
CUDDALORE - 607003.

02/08/2024

படி: சம்பந்தப்பட்ட அலுவலர்.

படி: சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.